பகுதிக்கும் அடித்துச் செல்லப்படுவதால் அந்த 'கரன்ட்' உள்ள பகுதியில் 'டர்பைனை' உள்ளே 'எரக்ஷன்' செய்தால், அதிலிருந்து மின்சாரம் தயாரிக்க லாம் என்று திரு. அப்பாதுரை, மின்சார வாரிய சேர்மனாக இருந்த சமயத்திலே, அது சம்பந்தமாக ஒரு ஆய்வு நடத்தியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி ஆய்வு நடத்தியது ஏதாவது அமைச்சருக்குத் தெரியுமா ? அதுபற்றிய விளக்கத்தை அமைச்சரவர்கள் சபைக்குத் தர முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வளர்ந்த நாடுகளிலே இது இன்னும் ஆராய்ச்சி அடிப்படையிலே இருக்கிறது. நாம் ஏன் இதை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். வளர்ந்த நாடுகளில் சில சின்ன யூனிட்டுகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. நாம் ஏன் இதை மேற்கொள்ள வேண்டுமென்றால், தேவையின் அடிப்படையிலே அதை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலே வேறு எந்த வழியும் இல்லை என்பதாலே பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது,

கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் தனிக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

திருவில்லிப்புத்தூர் நாச்சியார் கோயில் திருப்பணி

* வினா எண் 12—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் நாச்சியார்கோயிலில் திருப்பணி மேற்கொள்ளும் திட்டம் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) அருள்மிகு நாச்சியார் கோயில் திருப்பணிக்காக இது வரை ரூ. 2,99,685.76 மதிப்புள்ள வேலைகள் பொதுப்பணித் துறையால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணியினை முழுமையாக செய்து முடிக்க மேலும் ரூ. 9,40,000 தேவைப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் திருப்பணிக் குழு ஒன்றை நிறுவவும், ஏனைய திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்கவும் அறநிலையத் துறை ஆணையாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் திருப்பணி வேலைக்காக ஒதுக்கிய தொகைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ராஜகோபுரம், 196 அடி உள்ளது. அதைப் பார்த்தாலே பாவம் தீரும் என்று சொல்வார்கள்.....

TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : கேள்விதான். அப்படிப்பட்ட கோபுரம். இது வைஷ்ணவ கோயில் கோபுரமாக இருக்கிற காரணத்தால், திருப்பணிக்குச் செயற்குறிப்புகள் போடப்பட்டு எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கிறது. (குறுக்கீடு) இந்தக் கோவிலுடைய கோபுரத்தின் அடிச்சுவர்கள் இற்றுப் போய் கீழே விழும் தருவாயில், ஆபத்தான நிலையில் இருக்கிறது. அங்கிருந்த மக்கள் எல்லாம் பயந்து போய், மேற்கு மாம்பலத்திற்குக் குடி வந்து விட்டார்கள். பக்கத்திலே யாவரும் போவது கிடையாது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்வார்கள். இப்பொழுது கோயில் இருக்கும் ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நிலை வந்துவிட்டது. ஆகவே, அமைச்சரவர்கள் உடனே, ஜூப்பர்ஃபோன் மூலம் உத்தரவுகள் பிறப்பித்து, அதனைக் கவனிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி வேலைகளுக்கு 1964-லே திட்டமிடப்பட்டு, 1969-லே ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது தான் அந்தக் கோயிலினுடைய அஸ்திவாரத்தைப் பலப்படுத்துகிற வேலை முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பயப்படுவது போலில்லாமல், கோயிலினுடைய அஸ்திவாரம் பலப்படுத்தப்பட்டு விட்டதால், கோபுரத்திற்கு இனிமேல் ஆபத்து ஒன்றும் இல்லை. மற்ற திருப்பணிகளை எடுத்து நடத்துவதற்கான காரியங்களில் அறநிலையத் துறை இனிமேல் ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களில், பெரிய பெரிய பழைய கோவில்கள் எல்லாம் இடிந்த நிலையிலே இருக்கின்றன. அதற்கெல்லாம் திருப்பணி செய்யவேண்டும் என்று அறநிலையத் துறையினருக்கு அந்தக் கிராமத்து மக்கள் அப்ளிகேஷன் கொடுத்தால் அந்தத் திருப்பணிக்கு அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்பமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத ஒன்று என்றாலும், பொதுவான கருத்தைத் தெரிவிக்கிறேன். கிராம கோவில்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கலாம் என்ற விதி உருவாக்கப்பட்டு, அது மேலும் அதிகம் ஆக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோள் அறநிலையத் துறைக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறநிலையத் துறை அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்வியைப் போலவே நானும் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவில் திருப்பணியைப் பற்றிக் கேட்டிருந்தேன். அது இதில் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி இடம் பெறவில்லை என்பது பற்றி எல்லாம் இங்கே பேசக்கூடாது. மூலக் கேள்வியை ஒட்டி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : இதேபோன்றுதான். கடந்த 2 ஆண்டுகளாக, திருப்பணி வேலைத் துவக்கப்பட்டு அந்த வேலை பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுபற்றி சென்ற கூட்டத்திலேயே சொல்லி இருக்கிறேன். ராஜகோபுரம் முடிவடையவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அந்த ராஜகோபுரத்தை முடித்துத் தருவார்களா, கும்பாபிஷேகத்தையும் நடத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் நாச்சியார் கோவில் திருப்பணிக்கு குறித்த விவரங்கள் என் கையிலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திருப்போரூர் கோவிலைப் பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் கொடுக்கப்படும்.

(திரு. இல. பலராமன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கப்போவது திருவில்லிபுத்தூர் கோவிலைப் பற்றியதா அல்லது வடார்க்காடு மாவட்டத்தைப் பற்றியதா? இப்படியே கேட்டுக் கொண்டு போனால் தமிழ்நாடு முழுவதும் வந்து விடும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது சிறிய கோவில்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதாகச் சொன்னார்கள். அந்தத் தொகை, அறநிலையத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தக் கோவில்களுக்கு மட்டுமா, அல்லது தனிப்பட்ட ஏழை எளிய மக்கள் தெய்வ பக்தியின் காரணமாக ஏற்படுத்தி வழங்குகின்ற அந்தக் கோவில்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். இது மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி என்று. அவர்கள் தனியாக இது பற்றிக் கேள்வியைக் கேட்டால், விவரத்தை சேகரித்துத் தர வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும், ஏற்கனவே இருந்து இடிந்து போய் இருக்கிற கிராமக் கோவில்களுக்கும் தருவது என்று அறநிலையத் துறை முடிவெடுத்திருக்கிறது.